1979 ஏப்ரல் 26]

காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் துணைத் தொழிற்சாலை.

* வினா எண். 840— திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் டான்சி நிறுவனத்தின் துணைத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்போது துவங்கப்பட்டது?

(ஆ) அந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) தற்போது கிண்டியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் டான்சியின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு மோபட்ஸ்க்காக காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மறைமலை நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைக்கான கட்டுமான வேலைகள் 1979-ம் வருடம் ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) தொழிற்கூடத்தின் புறச்சுவர்கள் கதவு மேல்மட்டத்திற்குச் சரியாக எழுப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள வேலைகள் இவ்வாண்டு ஜுன் மாதம் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : டான்சி நிறுவனத்தின் துணைத் தொழிலகங்கள் தமிழகம் முழுவதும் எத்தனை ஒன்றியங்களில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்வி டான்சி நிறுவனத்தின் துணைத் தொழில்கள் காட்டாங்குளத்தூரில் அமைப்பது பற்றியதாகும். அது சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்கும்போதே நினைத்தேன். காட்டாங்குளத்தூர் பகுதியில் துணைத் தொழில்கள் நிறுவப்படுவதைப் பற்றிய மூலக் கேள்வியில் அது குறித்த துணைக் கேள்வியைக் கேட்காமல் வேறு எங்கோ உறுப்பினர் செல்லுகிறார்.

ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவுச் சங்கங்கள்.

* வினா எண். 841— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அரசு துறையைச் சேர்ந்த வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு மேற்படி சங்கங்களுக்கு அனுப்பப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?